பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 29 (13—1—68) சனி ★ வெளியூர்: மார்கழி 30 (14—1—68) ஞாயிறு [இதழ்: 177

தமிழகத் திட்டம்—தலைமையமைச்சர் பாராட்டு!

"தமிழகத்தில், ஏழைப் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுவருகிறது; பிற மாநிலங்களும் இத்திட்டத்தை அமுல் செய்வதில், தமிழ் நாட்டைப் பின்பற்ற வேண்டும்"

என்று, ஐதராபாத்தில், தலைமை அமைச்சர் இந்திரா, அனைத்திந்திய அரிசனங்கள் மாநாட்டில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

வேலைநிறுத்தங்களை உருவாக்கும் தலைவர்கள் சொத்துக்கள் பறிமுதல்!

திட்டம் பற்றி ஆராய்கிறது இலங்கை அரசு

கொழும்பு, சன. 13—

வேலை நிறுத்தங்களை உண்டாக்கி நடத்தும் தொழிற் சங்கத் தலைவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் திட்டத்தை இலங்கை அரசு ஆராய்து வருகிறது.

நாட்டில் உருவாகிவரும் வேலை நிறுத்தங்கள் உண்மையான தொழிற் சங்கக் கோரிக்கைகளாக இராமல், 'அரசியலால்' தூண்டிவிடப்படுகின்றன என்று அரசுக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்திருப்பதால் இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஒரு சார்பான அரசியல் கருத்துக்களையுடைய தொழிற் சங்கத் தலைவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் திட்டத்தைத் திருமதி பண்டாரநாயகாவின் அரசு 1963-ம் ஆண்டு—அதாவது, அது மார்க்சியவாதிகளுடன் கூட்டுச் சேருமுன்னர்—முதன் முகலில் கூறியது.

திருமதி பண்டாரநாயகாவின் அரசு வகுத்த நகல் திட்டத்தையொட்டிப் புதிய சட்டம் வகுக்கப்படும்.

பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற தலையாய நோக்கத்துடன் இத்திட்டம் கொண்டுவரப்படுவதாக அதிகாரபூர்வமான வட்டாரமொன்று கூறியது.

துறைமுக தொழிலாளர் வேலைநிறுத்தம்

அண்ணாவின் உறுதிமொழியால் திரும்பப் பெறப்படும்

சென்னை, சன. 12—

கடந்த ஐந்து நாட்களாக நடைபெற்றுவரும் துறைமுகத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம், தொழிலாளர்களுக்கும் — துறைமுகத் தொழிலாளர் போர்டுக்கும் இடையே உள்ள தகராறுகளை முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலையிட்டு, உடன்பாடு காண ஒப்புக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் திரும்பப் பெறப்படும் என்று தெரிகிறது.

அறிவிப்பு

பொங்கல் திருநாளை முன்னிட்டு 15—1—68 அன்று அலுவலகத்திற்கு விடுமுறையாகையால் 'நம் நாடு' அடுத்த இதழ் 16—1—68 சென்னையிலும், மறுநாள் வெளியூரிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

பொங்கல் வாழ்த்து!

'நம் நாடு' வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள், மற்றும் கழகத் தோழர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் 'நம் நாடு' அலுவலகச் சார்பில் பொங்கல் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன

தமிழக அரசின் அவசர நடவடிக்கை

சென்னை, சன. 13—

மொழிப் பிரச்சினை குறித்து மாணவர்களிடையில் தற்போது காணப்படும் அமைதியின்மை காரணமாக உடனடியாகத் தமிழகம் முழுவதிலுமுள்ள பள்ளிகளையும், கல்லூரிகளையும் காலவரையறையின்றி முடிவிடுவதெனத் தமிழக அரசு முடிவு செய்து உத்தரவிட்டிருக்கிறது.

"அரசினர்—தனியார் கல்வி நிலையங்கள், தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆகிய அனைத்தையும் இந்த உத்தரவு கட்டுப்படுத்தும்" எனத் தமிழக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

அதிர்ச்சியடைந்தேன்—திடுக்கிட்டுப் போனேன்!

காரைமடை சோக நிகழ்ச்சி—அண்ணா அறிக்கை

சென்னை, சன. 12—

"கோவை மாவட்டத்திலுள்ள காரமடையில், மாணவர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்தியபோது, தனியார் பஸ் ஒன்று ஏறி அதே இடத்தில் மாணவர் ஒருவர் இறந்துவிட்டதாகவும், இரு மாணவர்கள் காயமடைந்ததாகவும் வந்த செய்தியறிந்து அதிர்ச்சியடைந்தேன்—திடுக்கிட்டுப் போனேன்.

"பஸ்ஸை ஓட்டிவந்தவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்; மேலும் இதையொட்டி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

"இப்படி ஒரு சம்பவம் நடந்ததையறிந்து மிகவும் வேதனையடைகிறேன்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், இன்றிரவு விடுத்துள்ள உருக்கமிக்க செய்தியில் கூறியுள்ளார்.

செய்தி இது:

காரமடை, சன. 12—

கோவை மாவட்டம் காரமடையில், தனியார் பஸ் ஒன்றினை நிறுத்தும்படிக் கோரிய மாணவர்கள்மீது, எஸ். ஆர். டி. பஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பஸ் ஒன்று ஏறி அந்த இடத்திலேயே அரங்கராசன் என்ற மாணவர் ஒருவர் இறந்துவிட்ட துயரச் சம்பவம் ஒன்று இன்று மாலை நிகழ்ந்தது.

இச்சம்பவத்தில் வேணுகோபால், சையத் சாதிக் என்று இரு மாணவர்கள் காயமடைந்தனர்; அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தனியார் பஸ்ஸை ஓட்டிவந்த டிரைவர் கைது செய்யப்பட்டு, காரமடை போலீசு நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இதுதான்

இந்தியின் இலட்சணம்!

புதிய காங்கிரசுத் தலைவரின் சர்டிபிகேட்!

ஐதராபாத், சன. 13—

"இந்தியாவில் உள்ள மொழிகளிலேயே கடைசியாகத் தோன்றியதுதான் இந்தி மொழி!

"இந்தியை, 'இலக்கிய வளம் நிறைந்த மொழி' என்று ஒப்புக்கொள்ள இயலாது; அது இன்னும் வளரவேண்டிய மொழியாகும்!

"இந்தி வளர்ச்சியடைய வேண்டுமானால், அதில் உள்ள இலக்

(5-ம் பத்தி பார்க்க)

அரசியல் இலாபம் பெற ஆங்கில எதிர்ப்பா?

'கிளர்ச்சி தலைவர்களை எதிர்த்து நாங்கள் போராடுவோம்'

காசிப் பல்கலைக் கழகத்தில் ஏனைய மாணவர்களின் அறிவிப்பு

வாரணாசி, சன, 12—

'ஆங்கில எதிர்ப்பு' என்ற கிளர்ச்சி தொடர்ந்து நடத்தப்படுவது தங்களுடைய படிப்பைப் பாழடிக்கும் என்பதால், காசிப் பல்கலைக் கழக மாணவர்கள் சிலர், 'போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறு சொல்லும் அரசியல் கட்சியைச் சார்ந்த மாணவர் தலைவர்களை 'கேரோ' செய்வோம் என்று அச்சுறுத்தி இருக்கின்றனர்.

"நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக வர இப்போராட்டத்தை நடத்திச் சில மாணவர்கள் சிறை செல்லத் தயாராக இருக்கும்போது பொறியியல் வல்லுனர்களாக—டாக்டர்களாக—விஞ்ஞானிகளாக வரவிருக்கும் நாங்களும் இக்கிளர்ச்சிக்காரர்களின் எத்தகைய நடவடிக்கையையும் எதிர்த்துப் போராடத் தயார்" என்று காசிப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கேரளமும் கிளர்ந்து எழும்

மொழிச் சட்டம் குறித்து கவர்னரே எச்சரிக்கிறார்

திருவனந்தபுரம், சன. 13—

"ஆங்கிலம் கற்பிப்பதைப் பலவீனப்படுத்த அரசு விரும்பவில்லை—பலப்படுத்தவே விரும்புகிறது.

"ஆட்சிமொழிச் சட்டத்துக்கு நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தங்கள், சமரச உணர்வை மீறுவதாகவும், இந்தி பேசாத மக்களிடையே அச்சத்தை உருவாக்குவதாகவும் இருக்கிறது"

என்று, கேரளச் சட்டமன்ற நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரை வக்கிவைத்துப் பேசுகையில், மாநில கவர்னர் வி. விசுவநாதன் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

சுதந்தரத்துக்கு முன்பு ஆங்கிலம் இருந்தபோது இந்திக்கும்—மற்ற இந்திய மொழிகளுக்கும் என்ன உறவு நிலை இருந்ததோ அதுபோல், இப்போது இந்திக்கும்—மற்ற இந்திய மொழிகளுக்கும் உறவு நிலை இருக்கவேண்டும் என்ற போக்கை இந்தி பேசுவோர் கடைபிடித்தால், மற்ற மாநிலங்களில் நடப்பதைப் போன்றே கேரளத்திலும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெறும்."

(2-ம் பத்தி தொடர்ச்சி)

கணங்களை மாற்றியமைக்க வேண்டும்; வார்த்தை உச்சரிப்புக்களை மாற்றிப் புதிய உச்சரிப்புக்களைக் கொண்டுவர வேண்டும்.

"மற்ற மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களையும், கலாச்சாரத்தையும் இந்தி எடுத்துக் கொண்டு வளர வேண்டியிருக்கிறது!"

—நிஜலிங்கப்பா

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எல்லி

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 29 (13—1—68) சனி

'ஏர்முனை விழா'

தைத் திங்கள் முதல் நாள், தமிழர் திருநாள்.

தங்கள் அரும் உழைப்பின் விளைவைக் கண்டு, உழவனும் பாட்டாளியும் பூரித்து மகிழும் நன்னாள் -- இந்த நாள்.

விடியலில் எழுந்து புனலாடி -- புத்தாடை புனைந்து -- புத்தரிசியில் பால் பெய்து புதுப் பானையிலிட்டுப் பொங்கி எடுத்து -- விதவிதமான காய்கறிகளைச் சமைத்து -- சேர்ந்து உண்டு -- களித்து -- உள்ளக் கிளர்ச்சியுடன் அகமுகம் மலரத் தமிழ்க் குடும்பங்கள் ஒருவரோடொருவர் அன்புரையாடி வாழ்த்திடும் திருநாள், இத்தைத் திங்கள் முதல் நாள்.

ஏழையானாலும் பெரும் செல்வச் சீமானானாலும், தங்கள் தங்கள் வருவாய்க்கேற்ப முறையே எளிய முறையிலும், பகட்டான வகையிலும் இப்பொங்கல் புதுநாளை, நீண்ட நெடுங்காலமாகத் தமிழகத்தில் விழா நாளாகக் கொண்டாடிவருகின்றனர்.

சாதி, சமயம், அரசியல் போன்ற பேதங்கள் அனைத்தையும் மறந்து, மக்களாகப் பிறந்த அனைவரும் ஒருங்கு திரண்டு -- அன்புடன் அளவளாவி மகிழ்ந்திடத்தக்க நாளாகத் தை முதல் நாளை -- பொங்கல் புதுநாளை, காலஞ்சென்ற தமிழ்ப் பெரும் புலவர் காவேரிப்பாக்கம் நமச்சிவாயனார் தேர்ந்தெடுத்தார்.

அன்று முதல் இப்பொங்கல் புதுநாள், தமிழ் மக்களின் தேசியத் திருநாளாகக் கொள்ளப்பட்டு, தமிழ் மக்களால் கொண்டாடப்பட்டுவருகிறது.

இத் தமிழர் திருநாள், அறிஞர் அண்ணாவின் பேராதரவு பெற்றுத் திராவிடர் திருநாள்—தமிழர் திருநாள் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது.

இத் தமிழர் திருநாளை—நமது முன்னேற்றக் கழகத்தினரால்—தமிழகம் முழுவதிலும், தை முதல் நாள்தொட்டு தொடர்ந்து பல நாட்கள்வரை கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ் மக்களின் இத்தேசியத் திருநாளை, முன்னேற்றக் கழகம் மட்டுந்தான் கொண்டாடிவருகிறது என்றாலும், கழகத்தைப் பின்பற்றி மற்ற அரசியல் கட்சியினரும் கொண்டாடிவருகின்றனர்.

இத்துணை ஆண்டுக்காலமாக இத் தமிழர் திருநாளை, பொதுவாகத் தமிழகமும் குறிப்பாக முன்னேற்றக் கழகமும் கொண்டாடி வந்திருக்கிறது என்றாலும், இந்த ஆண்டு தமிழகத்தில் இத்திருநாள், முழுவதும் மாறியிருக்கின்ற வேறு ஒரு சூழ்நிலையில் கொண்டாடப்படுகிறது.

சென்ற ஆண்டுவரை தொடர்ந்தாற்போல் இருபதாண்டுக் காலமாகத் தமிழக அரசை இயக்கிக்கொண்டிருந்த காங்கிரசு ஆட்சி அகற்றப்பட்டு -- அப்பொறுப்பைக் கழகம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில், இந்த ஆண்டு பொங்கல் விழா தமிழகத்தில் கொண்டாடப்படுகிறது.

இதுவுமன்றி, இந்த ஆண்டு கொண்டாடப்படுகின்ற பொங்கல் விழா, மற்றொரு சிறப்பையும் பெற்றுள்ளது.

பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழறிந்த புலவர்கள் பலர் தமிழகத்தின் தலைநகரில் பத்து நாட்களாகக் கூடி—தமிழ் மொழியின் தனித் தன்மையை உலகத்தவர்களுக்கு உணர்த்தியுள்ள இந்த நேரத்தில்—'பல நாடுகளைச் சேர்ந்த தமிழ் கற்ற பேரறிஞர்களின் கருத்தில் இடம் பெற்றிருக்கக்கூடிய ஒரு செம்மொழியையா நாம் தாய்மொழியாகப் பெற்றிருக்கின்றோம்' என்ற மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக்கிடக்கின்ற நிலையில், இப்பொங்கல் புதுநாளைக் கொண்டாடுவதில் தமிழ் மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

நீண்டநாட்களாகக் காண விரும்பிய அரசை, தாம் விரும்பிய வண்ணமே தமிழ் மக்கள், தமிழகத்தில் உருவாக்கியுள்ளனர்; எனவே, தங்கள் நெடுநாளைய முயற்சி வெற்றி கண்டுவிட்டது என்ற பெருமித உணர்வுடன் தமிழ் மக்கள், இந்த ஆண்டு தை முதல் நாளை—பொங்கல் புதுநாளை—தமிழர் திருநாளை—வாழ்விலோர் பெருநாளாகக் கொண்டாடுகின்றனர்.

தம்பால் தமிழ் மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும், அறியவேண்டிய முறையில் அறிந்து வைத்திருக்கின்ற தமிழக அரசு, இந்தத் தமிழர் திருநாளை---பொங்கல் விழா நாளை---'ஏர்முனை விழா' நாளாகக் கொண்டாட வேண்டும்—என, கனிவுடன் வேண்டிக் கொண்டிருக்கிறது.

'ஏர்முனை விழா' என்ற சொல்லை, சென்ற ஆண்டே கோட்டையில் கோலோச்சிக் கொண்டிருந்த காங்கிரசுக் கட்சி பயன்படுத்திற்று என்றாலும், அது செயலுருவம் பெற்றிடவில்லை!

ஆனால், இந்த ஆண்டு பொங்கல் நாளை, 'ஏர்முனை விழா'வாகக் கொண்டாட வேண்டும் எனத் தமிழக அரசு கனிவுடன் வேண்டிக் கொண்டிருப்பது, நிச்சயமாகச் செயலாற்றப்படும்.

'ஏர்முனை விழா' நாளில் காடு கரம்பெல்லாம் நெல்லும், பல்வகைப் பயிர்களும் விளையும் நஞ்செய்--புஞ்செய் நிலங்களாக ஆக்கப்படும் என்பது உறுதி. ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இத்துறையில் எடுத்திடக்கூடிய பல்வேறு முயற்சிக்கு, ஆங்காங்கே உள்ள தமிழ்மக்கள் ஆர்வத்துடன் ஒத்துழைப்பை நல்குவர்.

தமிழகம், உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவுக் கோட்டை வெற்றியுடன் தாண்டி, மிகுதியாக விளைந்திடும் மாநிலமாக மாற்றப்பட்டுவிடும். 'ஏர்முனை விழா' நாள், இத்தகுதியைத் தமிழகத்துக்குத் தேடித் தரக்கூடிய துவக்க நாளாக அமைந்திடும் என்பது உறுதியிலும் உறுதி.

பொங்கல் புதுநாளை—தமிழர் திருநாளை—ஏர்முனை விழா நாளை—மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதில் முழுக் கருத்தைச் செலுத்தி, 'பொங்கலோ பொங்கல்' என, சிறார்கள் முதல் பெரியவர்கள்வரையில் களிப்புடன் முழங்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்க் குடும்பங்களுடன், 'பொங்கலோ பொங்கல்' எனப் பூரிப்புடன் நாமும் முழங்குகிறோம்!

தமிழகத்தில் பால் பொங்கட்டும்! வறுமை நீங்கட்டும்---வளம் பெருகட்டும்---இன்பம் பெருகட்டும்; தீமையெல்லாம் தொலையட்டும்! அறம் தழைக்கட்டும்! நீதி நிலைக்கட்டும்! தமிழ் மொழி அரசோச்சட்டும்! தமிழக அரசு மக்கள் நலம் பேணிப் பல்லாண்டு வாழட்டும்!

—கா. க.

மாநாட்டுக்கு வசூலான பணத்தில் பெரும்பகுதி மாவட்ட பணிகளுக்கே

கம்பன் சிலையைத் தவிர மற்ற சிலைகளெல்லாம் வசூலான நிதியிலிருந்து அமைக்கப்படவில்லை

பட்டிக்காட்டில் வசூலித்து பட்டணத்தில் செலவிடுவதாகக் கூறுவது கோமாளிப் பேச்சு---அமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, சன. 12—

"மாவட்டங்களிலிருந்து திரட்டப்பட்ட மாநாட்டு நிதியில் ஒரு சிறு பகுதிதான் மாநாட்டுச் செலவுக்குத் தரப்பட்டுள்ளது; மீதியுள்ள தொகை, 'அந்தந்த மாவட்டத்தின் பொதுப்பணிகளுக்கு—மருத்துவமனை, பள்ளிக் கட்டிடம் அமைப்பது போன்ற காரியங்களுக்குச் செலவிடப்பட வேண்டும்' என, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கூறிவிட்டார்கள்; ஆகவே, 'கிராமத்திலிருந்து பணம் திரட்டி நகரத்தில் பூம்புகார் விழாக் கொண்டாடிக் குதூகலமாக கும்மாளம்போடுகிறார்கள்' என்ற பேச்சு, கோமாளித்தனமானது"

என்று, பூம்புகார் மாநாட்டின் இறுதி நாளில் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி கூறினார்.

மாநாட்டிற்கென உழைத்தவர்களுக்கும், மாநாட்டில் பங்கேற்றவர்களுக்கும் அவர் தனித்தனியே நன்றி தெரிவித்துப் பேசுகையில், மேலும் குறிப்பிட்டதாவது:—

"கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் தமிழ்ச் சான்றோர்களின் சிலைகள் அனைத்தும் பொது நிறுவனங்களும், தனிப்பட்ட சிலரும் தந்த நிதியிலிருந்து அமைக்கப்பட்டவையாகும்; மவுண்டு சாலையில் அமைக்கப்பட்டுள்ள அறிஞர் அண்ணாவின் சிலையை எம்.ஜி.ஆர். அவர்கள் அமைத்துத் தந்தார்கள்.

மாநாட்டிற்கென மாவட்ட மக்களிடம் திரட்டிய பணத்திலிருந்து இந்தச் சிலைகள் அமைக்கப்படவில்லை—கம்பன் சிலை தவிர; கம்பன் சிலை ஒன்றுதான், மாநாட்டிற்கென கோவை மாவட்ட மக்களால் திரட்டப்பட்ட நிதியிலிருந்து அமைக்கப்படவேண்டிய சூழ்நிலை உருவாகியது.

விழாவிற்கு ஏற்பாடு செய்தவர்களே எதிர்பார்க்காத வகையில் பெருவாரியான மக்கள் தமிழ் விழாவில் கலந்துகொண்டனர்; நாள்தோறும் ரூ. 40,000-க்குக் குறைவில்லாமல் வசூலாகிக் கொண்டிருந்தது! இறுதியான கணக்கு இன்னும் சரிவரப் பார்க்கப்படவில்லை; அந்த நிலையிலும் தோராயமாக அரங்க நுழைவு வசூல் மாத்திரம் ரூ. 3 இலட்சத்தைத் தாண்டியிருக்கிறது!

சென்னை வசூல்போக மாவட்டங்கள்தோறும் மூன்று இலட்சம்—ஐந்து இலட்சம் என்று உச்சவரம்பாக ரூ 30 இலட்சம் வரை வசூலாகியிருக்கிறது; ஆனால், வசூலான பணத்தில் ஒரு சிறிய அளவுதான் உலகத் தமிழ் மாநாட்டுக்காகத் தரப்பட்டுள்ளது.

வசூலான தொகையில் ஒரு கணிசமான தொகையான ரூ. 9 இலட்சம், திருக்குறள் ஆராய்ச்சிக்காக மூன்று தமிழகப் பல்கலைக்கழகங்களுக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது; மீதியிருக்கும் தொகையை—மாவட்ட ரீதியாக வசூலான பணத்தை—அந்த வட்ட மக்களுக்கே மருத்துவமனை கட்டுவது—கல்விச் சாலைகளை ஏற்படுத்துவது முதலிய பணிகளுக்குச் செலவிடும்படி முதலமைச்சர் அண்ணா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ளதுபோல், எங்கள் கணக்கு பகிரங்கமான கணக்காகும்.

மாநாட்டின் எல்லாக் குழுவினரும் தங்கள் வரவு-செலவுக் கணக்குகளை விரைவில் அளிக்கவிருக்கிறார்கள்."

நிதியாண்டை மாற்ற வேண்டுமாம்

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரை

லக்னோ, சன. 13—

தற்போது நிதியாண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து ஆரம்பமாவதை நவம்பர் முதல் நாளுக்கு மாற்றவேண்டும் என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு, இந்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ளதாக ஆதாரமிக்க வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

'நிதி நிர்வாகம் பட்ஜெட்' என்னும் தலைப்பின் கீழான தனது அறிக்கையில், குழு இந்தப் பரிந்துரையைத் தெரிவிக்கும் என்று கூறப்படுகிறது.

"நிதியாண்டை மாற்றினால், ஆண்டுக்கான நிதித் திட்டங்களை நன்கு உருவாக்க அது உதவியாக இருக்கும்" என்று குழு கருதுகிறதாம்.

மூன்றெழுத்து உணர்த்தும் கருத்து!

சென்னை, சன. 11—

"உலகத் தமிழ் மாநாடு எனும் பெயரில் இரண்டு மாநாடுகள் இங்கு ஒரே நோக்கத்துடன் நடைபெற்றன; தமிழரின் வாழ்வு, 'அகம்—புறம்' எனப் பிரிக்கப்பட்டு, அந்த அகமும் புறமும் இணைந்த வாழ்வைத் தான் வாழ்ந்தார்கள்; அவ்விதம் இம்மாநாட்டுக்கும், 'அகக் குழு—புறக் குழு' எனப் பெயர் அமைந்தது!

"அகக் குழுவின் சார்பில் வெளிநாட்டறிஞர்களை அழைத்து தமிழ் ஆராய்ச்சி நடத்தப்பெற்றது; அதில் நல்ல ஆராய்ச்சிப் புதையல்கள் கிடைத்தன; அந்தப் புதையல் மேலும் ஒளிவிட்டு ஒளிரிரும்வகையில் — மக்களும் அதை உணர்ந்துகொள்ளும் வகையில்—தீவுத் திடலில் அமைந்த பூம்புகார் மாநாட்டில் தமிழ்ச் சான்றோரும், தமிழறிஞர்களும் கூடிப் பேசினார்கள்; அதனால் மக்களும் பயன்பெற்றார்கள்.

"வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்குத் தேங்காய் மூடியிலான கலைப் பொருட்கள் தரப்பட்டன; அந்தத் தேங்காயில் மூன்று கண்கள் இருக்கின்றன; அந்த மூன்று கண்களும், முத்தமிழை நமக்கு எடுத்தோதுகின்றன; அறிஞர் அண்ணா அவர்களின் தாரக மந்திரமான கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்பதை எடுத்துரைக்கின்றன! அது மட்டுமல்ல, 'அண்ணா' என்ற அந்த மூன்றெழுத்தையே அவை காட்டுகின்றன!

"அத்தகைய அண்ணாவின் பேராதரவுடன் கருத்தரங்கம் நடைபெற்றால், ஒரு குறிப்பிட்ட பகுதியினர் — ஆராய்ச்சியாளர்கள் தான் கலந்துகொள்ள முடியும்; ஆனால், உலகத் தமிழ் மாநாட்டைக் காண தமிழகத்திலிருந்து வந்த இலட்சோபலட்சம் மக்களுக்கு, கலைக் காட்சியை—அறிவுக் காட்சியை—கருத்துக் காட்சிகளைக் காட்டியது பூம்புகார் மாநாடு! அந்த மாநாட்டை முன்னின்று நடத்தியவர்கள் நமது பாராட்டுக்குரியவர்கள்!"

---அமைச்சர் கருணாநிதி

(அண்ணா அளித்த விருந்தில்)

மாநகராட்சி வட்டக் குழுத் தேர்தல்

சென்னை, சன. 12—

இன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சிமன்ற வட்ட (சர்க்கிள்) குழுத் தலைவர்கள் தேர்தலில் 11-வது வட்டக் குழுத் தலைவராக திரு. ஏ. எஸ். இராமன் அவர்களும், 12-வது வட்டக் குழுத் தலைவராக திரு. சா. கணேசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மெத்தப் பயன் விளைவித்த தமிழ் மாநாடு

இங்கிலாந்துப் பேராசிரியர் கருத்து

சென்னை, சன. 10—

"கடந்த ஆறு நாட்களக அறிவு செறிந்த பல்வேறு தலைப்புக்களை விவாதித்தது இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டிற்கு வருகை தந்த பிறநாட்டுத் தமிழ் அறிஞர்களுக்கு மெத்தப் பயனுள்ளதாக அமைந்திருந்தது"

என்று எடின்பரோ பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் ஆஷ் கருத்தறிவித்திருக்கிறார்.

முதல் உலகத் தமிழ் மாநாட்டை விட இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் அதிகமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டன என்றும் இரண்டாவது மாநாடு திருவிழா போலவே நடைபெற்றது என்றும் அவர் சொன்னார்.

மலேசியாவில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டில் 21 நாடுகளைச் சேர்ந்த 200 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர் என்றும், இங்கு நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டில் 40 நாடுகளைச் சேர்ந்த 430 தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் 200-பேர் வெளிநாடுகளைச் சார்ந்த பிரதிநிதிகளாவார்கள்.

அ. இ. வழக்கறிஞர் மாநாடு

கோகுலகிருஷ்ணன் தமிழகப் பிரதிநிதி

சென்னை, சன. 1[illegible]

அனைத்திந்திய வழக்கறிஞர் [illegible]கத்திற்குத் தமிழகப் பிரதிநிதிய[illegible] வழக்கறிஞர் கோகுலகிருஷ்ண[illegible] தேர்ந்தெடுக்கப்பட்டார்; அச்ச[illegible]கத்தின் மாநாட்டில் அவர் ப[illegible]கேற்பார்.

அனைத்திந்திய வழக்கறிஞர்க[illegible] சங்க மாநாடு சனவரி 27-[illegible] நாளன்று புதுடில்லியில் நடை[illegible]பெறும்.

காங்கிரசுத் தொழிற் சங்கம் கைகழுவப்படுகிறது!

புதுடில்லி, சன. 12—

"காங்கிரசுக் கட்சி சார்புள்ள இந்தியத் தேசியத் தொழிற் சங்கம், தொழிலாளர்களிடையே மதிப்பிழந்து வருகிறது" என்று அண்மைக்கால கணக்கெடுப்பு களிலிருந்து தெரியவருகிறது.

நான்காவது பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி பெருந்தோல்வியடைந்ததள் எதிரொலியாக இந்தச் சங்கம், தன் செல்வாக்கை இழந்துவருகிறது!

பல மாநிலங்களில் காங்கிரசல்லாத அரசுகள் அமைந்துவிட்டன; இந்தியத் தொழிற்சங்க அமைப்பாளர்கள் முன்புபோல் அரசாங்கத்தை அணுகி, காரியங்களைச் சாதிக்கும் வாய்ப்பை இழந்துவிட்டார்கள்; எனவே தொழிலாளர்கள், காங்கிரசல்லாத கட்சியினரின் தொழிற்சங்கங்களுக்கு ஆதரவளிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

"இந்த நிலை நீடித்தால், இந்தியத் தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசு இன்னும் இரண்டொரு ஆண்டுகளுக்குள் இறந்துவிடும்" என்று தொழிற் சங்கப் பிரமுகர் கருத்துத் தெரிவித்தார்.

இராமநாதபுர மாவட்ட

தி. மு. க. தோழர்களுக்கு:

"ஒரேநேரத்தில் எனக்கு இரண்டு அறுவைச் சிகிச்சைகள் நடந்து மதுரை மருத்துவமனையில் படுக்கையிலிருக்கிறேன்; சிகிச்சை முடிந்த பின்னர் சுற்றுப்பயணமோ, பொதுக்கூட்டங்களில் பேசுவதோ கூடாது (கண்டிப்பாக) என்று டாக்டர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்; ஆகவே என்னுடைய மறு அறிவிப்பு வருகின்ற வரையில், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. அலுவல்களை, மாவட்டத் துணைச் செயலாளர் மாங்குடி மதியழகன் அவர்களே கவனித்து வருவார்; மாவட்டத்தைச் சார்ந்த நண்பர்கள் அனைவரும், மாவட்டத் துணைச் செயலாளர் அவர்களுடன் தொடர்புகொள்ள கேட்டுக்கொள்கிறேன்"

என மாவட்டச் செயலாளர் எஸ் எஸ். தென்னரசு அறிவிக்கிறார்.

மதுரை 7-வது வட்டாரத்தில் முத்தமிழ்க் கலை விழா

தி. மு. க. சார்பில் இயல்; 14—1—68 இரவு 7-மணிக்கு பூந்தோட்டத்தில்; தலைவர்: எஸ்.எம். இரத்தினம்; வரவேற்புரை: தெ. அய்யம்பெருமாள்; சிறப்புரை: துரை முருகன் எம்.ஏ., ஆ. திராவிடமணி, பி. அறிவழகன், மற்றும் பலர்.

15—1—68 இரவு 7-மணிக்கு இசை; தமிழ்ச் சங்க வீதியில்; குமாரி விசயா குழுவினரின் 'ஆளுகின்றார் அண்ணா' என்னும் கலை நிகழ்ச்சி; தலைவர்: ஆர். சங்கையா; வரவேற்புரை: ஆ. தங்கவேல்.

16—1—68 இரவு 7-மணிக்கு மணிநகரத்தில் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்களுக்கு அறிவுடைநம்பி அவர்களின் பாராட்டுரையுடன் பொன்னாடை போர்த்தப்படும்; இரவு 10-மணிக்கு நாடகம்; மதுரை வள்ளுவர் கலைமன்றத்தாரின் 'புதுவாழ்வு' எனும் தமிழக அரசுத் திட்டப் பிரச்சார நாடகம் நடைபெறும்.

கோவையில் பொதுக்கூட்டங்கள்

கோவையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ. மாதாகவுடர், நீலாண்டியம்மாள், க. மருதாசலம், டி. டி. வேலு ஆகியோர், கீழ்க்கண்ட நாட்களில் — கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வர்:—

சன. 14: கோணவாய்க்கால் பாளையம்; 15: மதுக்கரை, இருகூர், குரும்பபாளையம்; 16: சிங்கா நல்லூர்; 17: கோட்டூர்; 22: குனியமுத்தூர், நரசிம்மாபுரம்.



பெரும் பயனும்
அரு மதிப்பும்
வாய்ந்த பொருள்கள்

கிடைக்கும் இடம்:

கதர் கைத்தொழில் அங்காடி

(கதர் கிராமக் கைத்தொழில் ஆயத்தின் ஒரு பிரிவு)

"குறளகம்"
என்னும் அங்காடி கட்டடத்தை
14—1—'68 அன்று மாலை 3.30 மணிக்கு
தமிழக முதலமைச்சர்
மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை, எம்.ஏ., அவர்கள்
திறந்து வைப்பார்

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி அவர்கள்
(உள்ளாட்சித் துறை அமைச்சர்)
தலைமை வகிப்பார்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள்
(பொதுப்பணித் துறை அமைச்சர்)
கதர் கைத்தொழில் அங்காடியைத் திறந்து வைப்பார்

கதர் கைத்தொழில் அங்காடி, ந்கரின் முக்கிய பகுதியில் 25,000 சதுர அடிகளுக்கு மேற்பட்ட பரப்பளவு கொண்டதாக அமைந்துள்ளது. கதர் கைத்தொழில் ஆயத்தின் எல்லாத் தொழிற் பிரிவுகளிலும் தயாரிக்கப் பெற்ற பல்வேறு விதமான பொருள்களை விற்பனை செய்கிறது.

தற்போது அங்காடியில் கீழ்க்காணும் பிரிவுகளிலுள்ள பொருள்கள் விற்பனையாகும்.

1. கதர்: அழகுத் திரைச் சீலைகள், பட்டுத் துணிகள்; தைத்த (ரெடிமேட்) உடைகள்.

2. கிராமக் கைத் தொழில்கள்: தூய்மையான 'அக்மார்க்' நல்லெண்ணெய்; தேங்காயெண்ணெய் கடலையெண்ணெய்; தேன். மண் பாண்டங்கள்: குளிர்சாதன பாண்டங்கள், ஊறுகாய் ஜாடிகள் முதலியன; தோல்: காலணிகள், கைப்பெட்டிகள், கைப் பைகள், பணப் பைகள் முதலியன, கையால் செய்யப்பட்ட காகிதம்: அழைப்பிதழ். வாழ்த்து இதழ், கடிதத் தலைப்பு முதலியவைகட்கு ஏற்ற காகிதம்.

3. பனைப் பொருள்கள்: பனைவெல்லம், பனங்கற்கண்டு, இனிப்பு வகைகள், பதநீர், பனை ஓலையினால் செய்யப்பட்ட அழகுப் பொருள்கள்.

4. கைவினைப் பொருள்கள்.

கதர் கைத்தொழில் அங்காடி வாரத்தில் ஆறு நாட்கள் காலை 9-30 மணி முதல் இரவு 8-00 மணி வரை திறந்திருக்கும். (ஞாயிறு விடுமுறை)
சிற்றுண்டி வசதி உண்டு; பதநீர் பானம் தனி இடத்தில் வழங்கப்படுகிறது.

கதர் கைத்தொழில் அங்காடிக்கு வருகை புரிந்து பெறும் பயனும் அரு மதிப்பும் வாய்ந்த பொருள்களை வாங்கிப் பயன் அடையுங்கள்.



SARATH-KKI

நிலவில் மனிதர்கள் இறங்குவர்!

நான்கு இடங்கள் கண்டுபிடிப்பு

விஞ்ஞானிகளின் மற்றொரு வெற்றிகரமான சாதனை

கென்னடி முனையிலிருந்து சென்ற ஞாயிறன்று ஏழாவது சர்வேயர் செலுத்தப்பட்டது. 50-கோடி டாலர் செலவில் அமெரிக்கா திட்டமிட்டு நிறைவேற்றிவைத்த நிலவு ஆராய்ச்சித் திட்டத்தில் இறுதியானது சர்வேயர்—7; இத்திட்டத்தின்கீழ் நடைபெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து, நிலவின் மையக் கோட்டை ஒட்டியுள்ள நான்கு இடங்கள் மனிதர்கள் இறங்குவதற்கு ஏற்றவை என்று அமெரிக்கா சான்று அளித்துள்ளது.

சந்திரனுக்கு அமெரிக்கா அனுப்பியுள்ள ஏழாவது ஆய்வுக் கோள், சந்திரனின் மேற்பரப்பைப் படமெடுத்து அனுப்பிக்கொண்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

நிலவின் மேற்பரப்பில், 'டைச்சோ' குழிக்குச் சற்றே வடக்கில் அது இறங்கியது; நல்ல வேளையாக எட்டு அங்குலம் குறுக்களவுள்ள ஒரு பாறைமேல் படாமல் அது தப்பியது; பட்டிருந்தால், கோள் கவிழ்ந்து விழுந்திருக்கும்.

குறித்த இலக்கினின்றும் 1½ மைல் தொலைவு விலகி ஒரு சிறு மேட்டில் அது இறங்கியது; நிலவின் தென் துருவத்தின் அருகிலுள்ள 'டைச்சோ' குழியின் விளிம்புக்கு அருகிலுள்ள ஒரு பாறை மேடு அது; 4,500 மீட்டர் ஆழமுள்ளது—'டைச்சோ' மடு.

ஏழாவது சர்வேயர் கோளின் மூன்று (குழல்) கால்களும் நிலவின் மேல்பரப்பின்மீது உறுதியாக ஊன்றி நின்றன; கோளிலுள்ள 'டெலிவிஷன் கண்கள்', உடனே மேற்பரப்பின் படங்களைப் பூமிக்கு அனுப்பிவைக்கத் தொடங்கின. இவ்வாறாக, விஞ்ஞானிகளுக்கு முதல் தடவையாக நிலவிலுள்ள மேட்டுப் பகுதிகளின் படங்கள் கிடைத்துவருகின்றன.

ஏழாவது சர்வேயரின் 2½ இலட்சம் மைல் பயணத்தில் கடைசி 13 அடிப் பயணம், கடும் சோதனைக்குள்ளாயிற்று; நிலவிலிருந்து அது இந்த உயரத்தில் இருக்கையில், வேகம் குறைக்கும் ஏவுகணைகள் அதன் வேகத்தைப் பெரிதும் குறைத்துவிட்டன; இவ்வாறு குறைப்பதற்குமுன்பு அது மணிக்கு 6,000 மைல் வேகத்தில் நிலவை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது.

மேட்டுப் பகுதியில் அது இறங்க வேண்டுமென்று விஞ்ஞானிகள் முடிவு செய்ததற்குக் காரணம், 'நிலவின் சமவெளிகளுக்கும் — மேட்டுப் பகுதிகளுக்கும் இடையே நில அமைப்பில் வேற்றுமை உண்டா' என்று கண்டறிய வேண்டுமென்பதே!

அடுத்த ஆண்டில் நிலவில் இறங்க இருக்கும் அமெரிக்க விண்வெளி விமானிகள், சமவெளியில் இறங்க வேண்டுமென்றுதான் திட்டமிடப்பட்டிருக்கிறது.

படங்கள் எடுப்பதோடுகூட, 'கதிரியக்கம் இருக்கிறதா' என்று கண்டுபிடிக்க நிலவு மண்ணையும் சர்வேயர் ஆராயும். அதில் ஒரு சிறு மண்வெட்டி இருக்கிறது. அது 18 அங்குலம் ஆழம்வரையில் தரையில் பள்ளங்கள் தோண்டக் கூடியது.

இரும்பு உண்டா?

ஏழாவது சர்வேயரில் காந்தக் கருவிகள் உண்டு; இவை, 'நிலவின் மேற்பரப்பில் இரும்பு இருக்கிறதா' என்று கண்டறியும்.

கோளில் பிரதிபலிப்புக் கண்ணாடிகளும் உண்டு. கோளை ஒட்டியுள்ள—அது இறங்கிய இடத்தின் நாலா பக்கங்களையும் (360 டிகிரி) இந்தக் கண்ணாடிகள் காட்டும்!

பாறைப் பகுதியில் சர்வேயர்-7 இறங்கி, சேதமடையாமல் பணியாற்றும் வாய்ப்பு நூற்றுக்கு நாற்பது அளவுதான் என்று விஞ்ஞானிகள் மதிப்பிட்டனர். முந்திய சர்வேயர்கள் இறங்குவதற்குத் தேவைப்பட்டதைக் காட்டிலும் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகத் துல்லியமாக சர்வேயர்-7 இறங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. கோள்கள் இறங்குவதற்குத் தேர்ந்தெடுத்ததைக் காட்டிலும் சிறியதான இறங்கும் இலக்கையே இதற்குத் தீர்மானித்தார்கள்.

நடக்க இருப்பவை

பொங்கல் விழா பொதுக்கூட்டங்கள்

15--1--68

கோவை—சூலூர்

10-வது வட்டம் உதயசூரியன் படிப்பகச் சார்பில் இரவு 7-மணிக்கு கருணாநிதி மன்றத் திடலில்; தலைவர்: எஸ். ஆர். நடராசன்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., அத்தாணி பாபு, இ. பே. சுப்பிரமணியம், எஸ். பி. சண்முகம்.

புதுப்பெருங்களத்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு நெடுஞ்சாலையில்; தலைவர்: சி. கே. பார்த்தசாரதி; பேசுவோர்: முனு. ஆதி எம்.எல்.ஏ., வெ. கண்ணன், சி. இராமலிங்கம், மு. விசுவநாதன், மற்றும் பலர். (துளசிராம் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் உண்டு).

அல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு மேலத் தெருவில்; தலைவர்: பொ. பரமசிவம்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., அன்பில் தர்மலிங்கம், சு. நெடுமாறன், புலவர் அருணா, வி. எம். கணேசன், பெ. காத்தான்.

பெங்களூர்

இலக்குமணபுரி தி. மு. க. சார்பில் மாலை 5-30 மணிக்கு சிட்டி புகை வண்டி நிலையம் அருகில்; தலைவர்: வெ. மகிழரசன்; பேசுவோர்: ஆடலழகன், எஸ். என். நாராயணன், தி. திராவிடமணி, இராமசாமி பி.காம்., என். ஏ. இரங்கசாமி, எம். தாண்டவம், ஆர். முனுசாமி, சந்திரகேகரன், மற்றும் பலர்.

எர்த்தாங்கல்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: த. பெருமாள்; பேசுவோர்: பி. செயராமன் எம்.எல்.ஏ., எ. க. துரைசாமி, எல். எம். எஸ். தட்சிணாமூர்த்தி, மு. க. மெய்ஞானம், மற்றும் பலர்.

16--1--68

கருவலூர்

கெ. வி. கே. சாமி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மாரியம்மன் திடலில்; தலைவர்: கே. எம். இராமசாமி; பேசுவோர்: எம். கே. நஞ்சா கவுடர் எம்.பி., க. செ. அவினாசியப்பன், கா. ம. குருசாமி, கா. அ. சத்திவேல், மே. ந. சென்னியப்பன். (சிவகங்கை சேதுராசன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

செஞ்சி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு உயர்நிலைப் பள்ளித் தெருவில்; தலைவர்: எஸ். எச். எஸ். குத்தூஸ்; பேசுவோர்: ஏ. வி. பி ஆசைத்தம்பி எம் எல். ஏ., வி. முனுசாமி எம்.எல்.ஏ., ஆர்.ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ.பி.எல்., கே. பாண்டுரங்கன் பி.ஏ.பி.எல்.

அலங்கார வண்டியில் இசை

15—1—68 காலை 6 மணிக்கு திரு. குசால்தாஸ் தலைமையிலும்—திரு. அ. செல்வராசன் எம்.சி., திரு. டி. எஸ். வேலன் ஆகியோர் முன்னிலையிலும் — தி.மு.க. சாதனையை விளக்கி, டேப் இராமச்சந்திரன் – இராசப்பா இசைக் குழுவினரால் அலங்கார வண்டி (தமிழக அரசின் தலைமைச் செயலகம் போன்ற முகப்புடன்) சென்னையில் முக்கிய வீதியில் இசை முழங்கிவருவர்.

விழா நிகழ்ச்சிகள்

சென்னை 92-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் காமராசர் காலனியில்; தலைவர்: ஏ. எஸ். இராமன் எம்.சி.; கொடியேற்றுபவர்: எம். குமார்; அண்ணா படத் திறப்பு: துணை மேயர் பவளவண்ணன்; இனிப்பு வழங்குபவர்: சா. கணேசன் எம்.சி.; பேசுவோர்: இரா. சடகோபன் எம்.சி., மா. செங்குட்டுவன், சைதை சம்பந்தம் எம்,சி., சோ. கி. மூர்த்தி, செ. கண்ணப்பன், க. துரை, மற்றும் பலர்.

சென்னை 65-வது வட்டம்

சென்னை 65-வது வட்ட தி.மு.க. ஆதரவாளர்கள் நடத்தும் தமிழர் திருநாளை முன்னிட்டு 15–1–68-ல் இன்னிசைப்போட்டி நடைபெறும்.

மேற்படி விழாவில் 15—1—68 காலை 7-மணிமுதல் மாலை 6-மணி வரை கலந்துகொள்ளும் குழுக்களின் வண்டிகளின் அலங்காரம்—பாடல்களின் சுவை—இசையின் இனிமை ஆகியவை போட்டியில் முக்கிய அம்சங்களாகக் கருதப்படும்.

16—1—68 மாலை 6-30 மணியளவில், சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று குழுக்களுக்கும் ஒரு போட்டி நடத்தி அவற்றில் முதல் — இரண்டாவது — மூன்றாவது எனத் தேர்ந்தெடுத்து முறையே பரிசுகள் அளிக்கப்படும்.

15—1—68: தலைவர்: ஆ. அ. கபாலமூர்த்தி (முன்னாள் துணை மேயர்); துவக்குபவர்: சி. வி. ஆடலழகன்; பாடல்கள் மேற்பார்வை: வித்துவான் புதுவை க. மோ. தமிழழகன்.

16—1—68: தலைவர்: எஸ். ஏ. தேவராஜ்; துவக்குபவர்: ஆ. அ. கபாலமூர்த்தி எம்.சி.; மலர் வெளியிடுபவர்: எம். எஸ். மணி; விழாச் சிறப்புரை: அமைச்சர் மா. முத்துசாமி, பவளவண்ணன் (துணை மேயர்), அப்துல் ரகுமான், என். வி. என். சோமு; திரு. ஜெயசங்கர் முன்னிலையில் பரிசுகள் வழங்கப்படும்.

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் — சென்னை-3

மாலை 4 மணிக்கு நாள்தோறும்

ரேக்ளா பந்தயம் நடைபெறும்

தி.மு.க.-வின் 18 ஆண்டுச் சாதனையைக் காணத் தவறாதீர்

14—1—68 ஞாயிறு (போகி பண்டிகையன்று)

5-30 முதல் 6-30 வரை:

விகடபூஷணம்

ஏ. எம். கோவிந்தராஜ் & எம். ஆர். ராஜா பார்ட்டியாரால்

விகடக் கச்சேரி

6-30 மணிக்கு:

அமெச்சூர் ஆக்டர்ஸ் குருப் அளிக்கும்

'விட்டில் பூச்சி' (நகைச்சுவை நாடகம்)

கட்டணம்: ரூ. 2, 1. காசு 50

இரவு 8 மணிக்கு வர்ண ஜால வாண வேடிக்கை நடைபெறும்

★

15—1—68 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு

(தமிழர் திருநாள் பொங்கலன்று)

உலக நாட்டியப் பேரொளி

பத்மினியின்

பிரேமானந்த் பிக்சர்ஸ் அளிக்கும்

'தசாவதாரம்'

நாட்டிய நாடகம் நடைபெறும்

கட்டணம்: ரூ. 10, 5, 3, 2, 1

காலை 9 மணியிலிருந்து டிக்கெட்டுகள் கிடைக்கும்

★

16—1—68 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிக்கு

(மாட்டுப் பொங்கலன்று)

விவேகா பைன் ஆர்ட்ஸ் அளிக்கும்

'சோ' நடிக்கும்

'இரவில் சென்னை'

கட்டணம்: ரூ. 3, 2, 1

இரவு 8 மணிக்கு வர்ண ஜால வாண வேடிக்கை நடைபெறும்

ஸன்காஸ்ட்

சிறந்த மோட்டார் உறுப்புகள்

கிளட்ச் ஹவுஸிங், பிரேக் ட்ரம்ஸ், கிங்பின்ஸ்



உறுதியும் உழைப்பும் மிக்க மோட்டார் உறுப்புகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அதனை பூர்த்திசெய்ய, சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனத்தார் மதுரையில் உள்ள தங்கள் நவீன தொழிற்சாலையில் ஸன்காஸ்ட் கிளட்ச் ஹவுஸிங்ஸ், பிரேக் ட்ரம்ஸ், கிங் பின்ஸ் முதலியவற்றைத் தயாரிக்கின்றனர்.

மிக உயர்ந்த சாமான்களைக் கொண்டு, மோட்டார்த் துறையில் பல்லாண்டுகள் அனுபவமுள்ள தொழிலாளர்கள், திறமையான மேற்பார்வையாளர்களின் கீழ் ஸன்காஸ்ட் மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கின்றனர்.

சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட்

B. சூப்பர் 1 & 2 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், மதுரை 7

(ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

tvs-s-4392

'குறளகம்' கதர்--கைத்தொழில் அங்காடி

அண்ணா திறந்துவைப்பார்

சன. 14-ம் நாள் மாலை 3-30 மணிக்கு சென்னை — பிராட்வே நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில் அமைந்துள்ள 'குறளகம்' எனும் கட்டடத்தை முதலமைச்சர் அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்; அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் தலைமை தாங்குவார்; 'குறளக'த்தில் அமைந்துள்ள கதர் — கைத்தொழில் அங்காடியை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் திறந்துவைப்பார்; வரவேற்புரை: பி. என். பரமசிவம் எம்.எல்.ஏ.; விற்பனையைத் துவக்குபவர்: க. அருணாசலம்; நன்றியுரை: து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ.

குழுக் கூட்டம்

14—1—68 காலை 10-மணிக்கு பெங்களூர் 56-வது வட்ட தி.மு.க. அவசரப் பொது உறுப்பினர் கூட்டம், எண் 103, இராமச்சந்திரா பீடி பேக்டரி, நேருபுரத்தில் (பழைய கழக பணிமனை அருகில்) நடைபெறும்; பல பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை 37-வது வட்டத்தில் குமாரி விஜயா கலை நிகழ்ச்சி

சூளை ஊ. பு. அ. சௌந்தர பாண்டியனார் நினைவுப் படிப்பகச் சார்பில் 19—1—68 மாலை 6-30 மணிக்கு, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெருவில், புலவர் அறிவுடைநம்பி முன்னிலையில்—நடிகமணி டி. வி. நாராயணசாமி தலைமையில் குமாரி விசயா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

பாலர் அரங்கம்

ஜன. 14-ந் தேதி மாலை 2; 4-15 மணிக்கு

'டார்ஜானும் நியூயார்க் வீரச்செயல்களும்'

(எம்.ஜி.எம். படம்)

கட்டணம்:

சிறுவர்களுக்கு: 20 காசு

பெரியவர்களுக்கு: 40 காசு

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

14--1--68

சிவகாசி

நகர தி.மு.க. சார்பில் இர 7 மணிக்கு நகராட்சிப் பூங்கா திடலில்; தலைவர்: க. மாரிய பன்; பேசுவோர்: எஸ். கஸ்தூரி, வே. கருணாகரன், எஸ்.பி. மணியம், ஏ. துரைக்கண்ணன், எஸ். ஏ. ரசாக், மற்றும் பலர்.

மதுரை

29-வது வட்ட பொற்செழியன் நினைவு மன்ற ஆண்டுவிழா; இரவு 7 மணிக்கு பழைய மாகாளிபட்டு ரோடு -- தெற்கு வெளி வீதியில்; தலைவர்: நா. தலைவர்: நா. இராமலிங்கம்: பேசுவோர்: இராச முகம்மது பி.ஏ., சதாசிவம், முத்தையா, எழிலரசன், கூடலரசன், மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை--13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.